தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்.

*வினா எண் 691—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சலவைத் தொழிலாளர்களை ஷெட்யூல் வகுப்பில் சேர்க்குபடியாக மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், என்ன பதில் வந்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) மற்றும் (ஆ) 1970 ஆம் ஆண்டில் இம்மாநில அரசு தமிழ்நாடு முழுவதிலுமுள்ள "வண்ணார்," "புதிரை வண்ணார்" என்ற இனங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் அப் பரிந்துரையினை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், எல்லா மாநிலங்களிலுமே இழிவான தொழிலில் ஈடுபடக்கூடிய, அதாவது மலஜலம் எடுக்கக்கூடியவர்கள், குப்பை அள்ளக்கூடியவர்கள் எவ்வளவு பேர்கள் உண்டோ அவ்வளவு பேர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சலவைத் தொழிலாளர்கள் மற்றவர்கள் துணிகளை சலவை செய்வது மட்டும் அல்லாமல், மிக மோசமான நிலையில் இருக்கக்கூடிய நோயாளிகளுடைய துணிகளையெல்லாம் கூட வெளுக்கக் கூடியவர்கள், அப்படிப்பட்டவர்களை மற்ற மாநிலங்களிலே தாழ்த்தப்பட்ட வகுப்பிலே சேர்த்திருக்கும்போது இந்த தமிழ்நாட்டிலே உள்ளவர்களை மட்டும் ஏன் சேர்க்க கூடாது என்பதற்கான காரணங்களை கேட்டீர்களா, அதற்கு அவர்கள் என்ன கூறினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தான் இந்த அரசாங்கம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆனால் தீண்டாமை என்கிற கொடுமை அவர்கள் மத்தியில் இல்லை என்கிற காரணத்தினால், அவர்களைச் சேர்க்க இயலாது என்று கூறியிருக்கிறார்கள். மேலும் ஒரு முறை இந்த சலவைத் தொழிலாளர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் மேல் மத்திய அரசாங்கம் தான் அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1979 ஏப்ரல் 17]

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த விதிகளின் அடிப்படையில் சில வகுப்புகளை இந்த தாழ்த்தப் பட்ட வகுப்பிலே சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும், இந்த சலவைத் தொழிலாளர்களை கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதே பழக்க வழக்கங்களைக் கொண்ட இந்த பிரிவினர் அதாவது வண்ணார், புதிரை வண்ணார் என்ற இவர்கள் தமிழ்நாடு பூராவும் இருக்கின்ற காரணத்தினால் அவர்களை, தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அரசு மேலும் முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வகுப்பினரை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு முதலில் அவர்கள் தீண்டாமை கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்க வேண்டும். கல்வி, சமூகம், பொருளாதாரம் வாழ்க்கையின் பின்தங்கிய நிலைமையில் இருக்க வேணடும். மத்திய அரசாங்கம் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலியில் செங்கோட்டை வட்டத்திலுள்ள 'வண்ணான்' புதிரை வண்ணான், என்கிற சலவைத் தொழிலாளர்களை இந்த அடிப்படையில்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்த்திருக்க வேண்டும். ஆனால் நாம் இங்கே வண்ணார், புதிரை வண்ணார் என்று 'ர்' போட்டு விட்ட காரணத்தினால் மத்திய அரசாங்கம் சேர்க்க மறுத்திருக்கலாம்.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் வண்ணாரிடமிருந்து இரண்டாவதாக மனுக்கள் வந்திருக்கின்றன. என்று சொன்னார்கள். அது எப்போது வந்தது? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது? மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா இங்கே வண்ணான் என்பதற்கும் வண்ணார் என்பதற்கும் உள்ள வித்தியாசம் இர், இன் என்ற அளவில் மட்டும்தானா அல்லது ஏதாவது சமுதாயத்திலே வித்தியாசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் பாராளுமன்றக் குழு தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது இந்தக் கோரிக்கையை அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். இனி அவர்கள்தான் பரிசீலனை செய்து இந்த மாநில அரசு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிச் சொல்ல வேண்டும். அப்போது தகுந்த பதிலை இந்த அரசாங்கம் அளிக்கும். இர், இன் என்பது எழுத்தளவில் தான் வேறுபாடு இருக்கிறதே தவிர வேறெந்த வேறுபாடும் இல்லை.

[1979 ஏப்ரல் 17

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத்தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் இந்த சலவைத் தொழிலாளிகள் சலவை செய்கிறார்கள். வேறு சாதியினருக்கு அவர்கள் சலவை செய்ய முடியாது. ஆகவே அவர்களுக்குரிய குறைபாடுகளைப் போக்குகின்ற வகையில் அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இது போன்ற சலவைத்தொழில்செய்பவர்கள் அந்தப் பட்டியலில் தான் இருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற பிரச்சினை மற்ற எல்லா வகுப்புகளுக்கும் சலவை தொழில் செய்பவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதுதான்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, புதிரை வண்ணான் என்று சொல்லப்படுபவர்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இருப்பதாகச் சொல்வது சரிதானா? குதிரை வண்ணான் என்ற பிரிவைச் சேர்ந்த அத்தனை பேரும் ஏற்கனவே இந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இர். இன். தான் வித்தியாசம். ஆகவே எல்லா சலவைத் தொழிலாளர்களையும் இந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கு தீவிரமான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குதிரை வண்ணான் என்கிற இனத்தவர் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் பட்டியலிலே சேர்ப்பதைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்கிற அதிகாரம் தான் இருக்கிறது. பட்டியலில் சேர்க்கின்ற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்ப்பதற்கான கேள்வியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் இந்தத் தொழில் செய்யக் கூடியவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் அவர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. ஆகவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

1979 ஏப்ரல் 17]

அடுத்து இந்த சலவைத் தொழிலாளி என்ற கேள்வியில் பேசும்போது குதிரை வண்ணான் என்றும் கழுதை வண்ணான் என்றும் அந்த இனத்தவரைக் கேவலப்படுத்தக்கூடிய வகையில் அமைச்சரவர்களும் மற்ற உறுப்பினர்களும் சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, புதிரை வண்ணான் என்பது பட்டியலில் இருக்கிற பெயர். ஆகவே நானோ மற்ற உறுப்பினர்களோ வேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே இதிலே தவறேதும் இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் அனுதாபம் இருக்கிறது. ஆகவே 1970-ம் ஆண்டு பரிந்துரை செய்த போது மத்திய அரசு கேட்கவில்லை. மீண்டும் பரிந்துரைக்க அரசு தயாராக இருக்கிறது.

*வினா எண். 692— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சவரத் தொழிலாளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கக் கோரி, அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) சவரத் தொழிலாளர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாகாத காரணத்தால் இவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க இயலாது என்று மத்திய அரசாங்கம் கூறிவிட்டது.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, இந்தச் சவரத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்ததாகவும் அதற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆகவே மீண்டும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசு கேட்டுக்கொண்டு அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அனுமதி பெறுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து இதுவரை எந்த எந்த இனத்தவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரத்தை அறிவிப்பார்களா?